நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள். ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை (15-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 109

# வடக்கில் உயர்தர பரீட்சை நடத்த படையினர் அனுமதி

## திட்டமிட்டபடி ஏப்ரல் முதல் வாரத்தில்

யாழ்ப்பாணம், மார்ச் 15

வடக்கில் உயர்தர விசேட பரீட்சையை நடத்துவதற்குக் கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் பரீட்சைப் பகுதிக்கு அனுமதி வழங்கி உள்ளது.

அதனைத் தொடர்ந்து விசேட பரீட்சையை திட்டமிட்டபடி ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்துவதற்குப் பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்து வருவதாகக் கொழும்பில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பில் கடந்த செவ்வாயன்று, கல்வி அமைச்சு அதிகாரிகள் மற்றும் கூட்டுப்படை அதிகாரிகள் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் பரீட்சை நடத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

நாளை மறுதினம் கொழும்பில் இருந்து புறப்படவுள்ள கப்பலில் பரீட்சைக்கான காகிதாதிகள் எடுத்து வரப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 1990 ஆகஸ்ட் மாதத்தில் நடக்க வேண்டிய ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைபெறவில்லை. பாதுகாப்புக் காரணங்களைக் காட்டிப் பரீட்சையை நடத்துவதற்கு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## படையினர் சூடு!

மாதகல், திருவடிநிலை கடற்பகுதியில் இருந்து கடற்படையினர் நேற்றுக்காலை கரையோரப் பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இதேவேளை பூநகரி — கல்முனை பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் நேற்றுமுன்தினம் இரவு ''பரா'' வெளிச்சக் குண்டுகளை ஏவியதுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர்.

## தொழில் நுட்பப் பரீட்சை வினாத்தாள்கள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப் பரீட்சைகளுக்கான ஒரு தொகுதி வினாத்தாள்கள் நேற்றுத் தரை மார்க்கமாக யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட்டன.

நாளை ஆரம்பமாகவிருக்கும் சுருக்கெழுத்து, தேசிய கல்விச் சான்றிதழ் ஆகிய பாடத்திட்டங்களுக்கான இறுதிப் பரீட்சைகளுக்குரிய வினாத்தாள்களே எடுத்து வரப்பட்டுள்ளன.

தொடர்ந்து நடைபெறவுள்ள ஏனைய பரீட்சைகளுக்கான நேரசூசி மற்றும் ஒரு தொகுதி அனுமதி அட்டைகள் என்பனவும் அவற்றுடன் எடுத்து வரப்பட்டுள்ளன.

நேரசூசியின்படி ஏனைய பாடங்களுக்கான பரீட்சைகளும் அவை நடைபெறவுள்ள திகதி விவரங்களும் வருமாறு:-

**மார்ச் 30**

சுருக்கெழுத்து, தட்டெழுத்து செய்முறைப் பரீட்சை, வணிகக் கற்கைகளிலான தேசிய டிப்ளோமா, ஆங்கிலத்திலான மேற்பட்ட கல்வித் தேசியச் சான்றிதழ், உயர் தேசிய வர்த்தக/கணக்கியல் டிப்ளோமா [2ஆம்

]6 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளுடன் அரசு பேசுவதை சுதந்திரக் கட்சி எதிர்க்காது!

### அனுரா பண்டாரநாயக்கா அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 15

விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் பேச்சு நடத்துவதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எதிர்க்காது.

— அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் எதிர்க்கட்சிப் பதில் தலைவருமான அனுரா பண்டாரநாயக்கா இப்படி அறிவித்திருக்கிறார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்தும் பேச்சுகள் பற்றிய விவரங்களை அரசு எதிர்க்கட்சிகளுக்கு வெளியிட வேண்டும். அப்படிச் செய்தால் பேச்சு நடத்துவதை நாம் எதிர்க்கமாட்டோம் என்றார் அவர்.

கடந்த வியாழனன்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டியளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எல்லோரும் யுத்தத்தை எதிர்க்கிறார்கள். நாங்களும் யுத்தத்தை எதிர்க்கிறோம்.

**பயனற்ற யுத்தம்**

பிரயோசனமற்ற வடக்கு - கிழக்கு யுத்தம் தொடருவதை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காகவே எட்டுக் கட்சி அமைப்பு மூலம் கதிர்காம பாத யாத்திரையை நடத்தவுள்ளோம்.

அரசாங்கம் யுத்தத்தைத் தவறான முறையில் கையாண்டு வருவதையும், அரசியல் தீர்வு ஒன்றைக் காணத் தவறியதையும் வெளிச்சத்துக்குக் கொண்டுவர எதிர்க்கட்சி

[6ஆம் பக்கம் பார்க்க]

## தமிழீழம் அமைவதற்கு தமிழகம் உதவ வேண்டும்!

### சட்டசபையில் கோரிக்கை

சென்னை, மார்ச் 15

''இலங்கையில் தனித் தமிழ் ஈழம் அமைய தமிழக அரசு உதவவேண்டும்.''

தமிழக மாநில சட்டசபையில் நேற்றுமுன்தினம் வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உரையாற்றிய போது அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத்தின் தலைவரான திரு. எஸ். திருநாவுக்கரசு இவ்வாறு கூறினார்.

இந்தக் கொள்கையைத்தான் முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர். ஆதரித்தார் என்றார் அவர்.

அப்போது நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியனும் மற்றும் பல அமைச்சர்கள் குறுக்கிட்டு அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். [உ-10]

## வடபகுதி மீனவர்களின் கடல் பாதுகாப்பு வலய யோசனை நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 15

யாழ். குடாப் பிரதேசத்தில் மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட வசதியாக கடல் பாதுகாப்பு வலயம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

1985இல் இருந்ததுபோன்ற 5 மைல் கடல் பாதுகாப்பு வலயம் ஒன்றை இப்போதும் ஏற்படுத்த வேண்டும் என்று வடபகுதி மீனவர்கள் விடுத்த கோரிக்கையை, ஏற்க முடியாதிருப்பதாக கடற்றொழில் அமைச்சர் ஜோசப் மைக்கல் பெரேரா கூறியிருக்கிறார்.

வடபகுதி மீனவர்களின் கோரிக்கை யாழ். அரச அதிபர் ஊடாக அரசாங்கத்துக்கு முன் வைக்கப்பட்டது தெரிந்ததே. [உ-10]

## முச்சந்தி முரளி



பாவம் தீர்க்க பாத யாத்[illegible]

## எட்டுக் கட்சிக் கூட்டணியின் கதிர்காம பாதயாத்திரை நாளை ஆரம்பமாகிறது

கொழும்பு, மார்ச் 15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட எட்டுக் கட்சி கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருக்கும் கதிர்காம பாதயாத்திரை நாளை காலை 10 மணிக்கு கொழும்பு விகாரமாதேவி பூங்காவிலிருந்து ஆரம்பமாகின்றது

ஸ்ரீ. ல. சு. கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி நவ சமசமாஜக் கட்சி, ஈ. பி. ஆர். எல். எவ்.. தேச விடுதலை மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா முன்னேற்ற முன்னணி, பகுஜன் நிதஹஸ் பெரமுன மற்றும் ஜனநாயக தேசிய முன்னணி ஆகிய எட்டுக் கட்சிகள் இந்தப் பாதயாத்திரையை கூட்டாக ஏற்பாடு செய்துள்ளன.

ஆறு முக்கிய விடயங்களை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக இந்தப் பாதயாத்திரை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அதன் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பிரயோசனமற்ற வடக்கு, கிழக்கு யுத்தம் தொடருவதை

[6ஆம் பக்கம் பார்க்க]

## பாதயாத்திரையைக் குழப்ப அரசுத் தரப்பில் திட்டம்?

எதிர்க்கட்சிகள் நாளை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ள கதிர்காம பாதயாத்திரையைக் குழப்புவதற்கு அரசுத் தரப்பில் திரைமறைவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவித்தது.

பாதயாத்திரை குறித்து ஆங்காங்கே ஒட்டப்பட்டிருந்த ''போஸ்டர்கள்'' கிழித்தெறியப்பட்டுள்ளன

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப் பணிமனைக்கு முன்னால் வைக்கப்பட்டிருந்த விளம்பரத்தட்டியும் நாசமாக்கப்பட்டுள்ளது.

யாத்திரையின் போது ஒலிபெருக்கி உபயோகிக்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பாதயாத்திரையின் போது பொலீஸ் தரப்பிலிருந்து இடைஞ்சல்கள் ஏற்படுத்தப்படலாம் என்றும் சந்தேகிக்கப்படுகிறது

[உ-10]

## கிளிநொச்சியில் அரிசி விலை வீழ்ச்சி!

கிளிநொச்சி, மார்ச் 15

கிளிநொச்சிப் பகுதியில் நெல், அரிசி ஆகியவற்றின் விலைகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன.

இப்பகுதியில் காலபோக நெல் அறுவடை ஆரம்பமாகியிருப்பதே இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை 1,600 ரூபாவாக விற்கப்பட்டு வந்த ஒரு மூடை அரிசி இப்போது 1,200 ரூபா முதல் 1,250 ரூபா வரை விற்கப்படுகிறது. ஒரு மூடை நெல்லின் விலையும் 600 ரூபாவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

(அ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். குடாநாட்டில் மட்டும்

# விசர் நாய்க் கடியினால் கடந்த வருடம் 15 பேர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 15

யாழ். குடாநாட்டில் கடந்த வருடம் விசர் நாய்க் கடியினால் 15 பேர் மரணமானார்கள். இந்த வருடம் இது வரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் நடவடிக்கை மற்றும் நாய் கடித்தவர்களுக்கு உரிய நேரத்தில் தடுப்பு மருந்து வழங்கியமை போன்றவை காரணமாகவே யாழ். மாநகரப் பகுதியில் பாதிப்பு குறைவாக உள்ளது என்றும் அவர் கூறினார்.

விசர் நாய்க்கடி நோய் ஒழிப்பு நடவடிக்கையில் வீட்டு வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடுவது மிக முக்கியமானதாகும் என்றும் அவர் சொன்னார். [ஒ]

## யாழ். மாநகர மன்ற பகுதியில்

# வளர்ப்பு நாய்களுக்கு நாளை முதல் தடுப்பூசி

யாழ். மாநகராட்சி மன்ற எல்லைக்குள் வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் நடவடிக்கை நாளை முதல் மாத இறுதி வரை மேற்கொள்ளப்பட விருப்பதாக யாழ். சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

இது பற்றிய மேல் விவரங்களை சுகாதாரப் பரிசோதகர்களிடம் அல்லது சனசமூக நிலையப் பொறுப்பாளர்களிடம் அல்லது யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மாநகராட்சி மன்றத்தின் 1992 ஆம் ஆண்டுக்குரிய உத்தரவுப் பத்திரம் பெற்ற நாய்களுக்கு மாத்திரம் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும்—

தடுப்பூசி ஏற்றப்படும் இடத்திலேயே உத்தரவுப் பத்திரம் பெற்றுக்கொள்ள வசதி செய்யப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# வடக்கிற்கு என வந்த பசுக்களை தெற்கே வழங்க பிரதமர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 15

ஆஸ்திரேலிய தொண்டர் நிறுவனம் ஒன்று மல்லாகத்தில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்காக வழங்க இருந்த இருநூறு நல்லின பசுக்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்பட உள்ளன.

சம்பந்தப்பட்ட தொண்டர் நிறுவனத்தின் பிரதிநிதி யாழ்ப்பாணம் வருவதற்கு பிரதமரைச் சந்தித்து அனுமதி கேட்ட போதிலும் அது மறுக்கப்பட்டது.

பிரதமரும், விவசாய அமைச்சரும் குறிப்பிட்ட 200 பசுக்களையும் தெற்கில் ஒரு பிரதேசத்துக்கு அனுப்புமாறு சம்பந்தப்பட்ட பிரதிநிதியான லென் றீட்டை வற்புறுத்தினர். எதுவும் செய்ய முடியாத நிலையில் அவர் அதற்கு ஒப்புக்கொண்டார்.

இந்தத் தகவலை திரு. லென் றீட்டே தெரிவித்திருக்கிறார்.

தமது தொண்டர் நிறுவனம் 1970 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்குப் பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகவும்—

ஆனால் கடந்த டிசம்பரில் தாம் கொழும்பு வந்து, யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு அனுமதி கேட்டபோது அதற்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவும்—

பிரதமரை நேரில் சந்தித்து அனுமதி கேட்டவேளை, அவருடன் கூட இருந்த படை அதிகாரிகள், தன்னை சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதி என்று சந்தேகித்து அனுமதி வழங்க மறுத்தனர் என்றும்—திரு. றீட் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். ஸ்ரீபாஸ்கரனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். [அ]

# உபேந்திரா மற்றும் 6 பேர் கட்சியிலிருந்து நீக்கம்

ஹைதராபாத், மார்ச் 15

தெலுங்குதேசம் கட்சியிலிருந்து முன்னாள் அமைச்சர் திரு. பி. உபேந்திராவும் மற்றும் ஆறு எம். பிக்களும் விலக்கப்பட்டுள்ளதாக கட்சியின் தலைவர் திரு என் ரி. ராமராவ் நேற்று ஹைதராபாத்தில் கூறினார்.

விலக்கப்பட்ட எம். பிக்களில் திரு. பி. உபேந்திரா மேலவை உறுப்பினர். ஏனையோர் லோகசபை உறுப்பினர்கள் ஆவர்.

தெலுங்கு தேசம் கட்சியின் சில எம். பிக்கள் ஜனாதிபதி உரைக்கு எதிராக வாக்களிக்காமல் நடுநிலை வகித்ததற்கு இரு மத்திய அரசு அமைச்சர்கள் பின்னணியில் செயல்பட்டனர் எனவும் திரு. ராமராவ் குற்றம் சாட்டினார்.


## சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் வருடாந்தப் பொங்கல் விழா

மேற்படி
பொங்கல் விழாவை முன்னிட்டு

17-03-92 செவ்வாய்க்கிழமை விளக்கு வைபவம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து
24-03-92 செவ்வாய்க்கிழமை முதலாம் பொங்கலும்
31-03-92 செவ்வாய்க்கிழமை இரண்டாம் பொங்கலும் நடைபெறும்.

இப்படிக்கு:
— பரிபாலனசபை —

[20083]


# இன்று

★ யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து வளர்மதி அணி மோதும். இந்த ஆட்டம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெறும்.

யாழ். சென். பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெறும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் ஊரெழு இளைஞர் அணியை எதிர்த்து சென் மேரிஸ் நீல அணி மோதும்.

★ ★ ★

சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கான கூட்டுறவு சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு, இன்று ஞாயிறு காலை 9-00 மணிக்கு யாழ். மணியம் கட்டடத்தில் நடைபெறும்.

பிராந்திய சபைத் தலைவர் திரு. செ. கந்தசாமி கருத்தரங்கிற்குத் தலைமை வகிப்பார். [இ-30]

# நாளை

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் பயின்று தற்போது தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ள — 1990, 91, 92, 93, 94 ஆம் ஆண்டுகளுக்குரிய ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான கூட்டம் நாளை திங்கள் நண்பகல் 12.30 மணிக்கு நடைபெறும்.

நடேஸ்வராக் கல்லூரி தற்காலிகமாக சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் இயங்கி வருகிறது. அங்கு கூட்டம் நடைபெறும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜி. சீ. ஈ. [உயர்தர] பரீட்சைக்கு விண்ணப்பிப்பது, மாணவர் வருடாந்த ஒன்றுகூடல் உட்பட பல்வேறு விடயங்கள் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

★ ★ ★

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான சரப்பந்தாட்ட பயிற்சி முகாம் நாளை பிற்பகல் 3 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றில் அந்தந்தப் பகுதிவலய மாணவர்களின் பயிற்சிப் பாசறைகள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது

★ ★ ★

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். [இ]

★ ★ ★

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 16 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

யாழ். வைத்தீஸ்வரக் கல்லூரியில் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு பேடன் பவல் விழா நடைபெறுகிறது. (இ)

# இன்றைய ஆட்டங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

★ இந்தியா எதிர் தென்னாபிரிக்கா.

★ பாகிஸ்தான் எதிர் இலங்கை.

★ நியூஸிலாந்து எதிர் இங்கிலாந்து.

முதல் இரண்டு ஆட்டங்கள் அவுஸ்திரேலியாவிலும் மற்றையது நியூஸிலாந்திலும் நடைபெறும்.

# துருக்கியில் நிலநடுக்கம் 600க்கும் அதிகமானோர் பலி

லண்டன், மார்ச் 15

துருக்கியின் கிழக்குப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மிகப் பெரும் நிலநடுக்கத்தினால் அறுநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்; பெருமளவு உடைமைகள் நாசமாகின.

அனடோலி மாகாணத்தில் உள்ள ஏர்லிங்டன் நகரமே மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. அங்கு மட்டும் இதுவரை ஐநூறுக்கும் அதிகமானோரின் சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன. இடிபாடுகளுக்கிடையே மேலும் நானூறுக்கும் அதிகமானோர் சிக்கியிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

ரிச்டரில் 6.2 அளவுடையதாக இருந்த இந்த நில அதிர்வு, துருக்கியில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கங்களில் ஒன்று என்று கூறப்படுகிறது.

துருக்கியில் கடந்த ஆயிரம் ஆண்டுகளில் 11 தடவைகள் பாரிய நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பதாக ஆய்வியலாளர்கள் தெரிவித்தனர்.

1939 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெரும் நிலநடுக்கம் ஒன்றில் துருக்கியின் பல நகரங்கள் அழிந்தன என்றும், சுமார் 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [உ-த-10]


## 2ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு :
19 — 11 — 69

★

உதிர்வு :
15 — 03 — 90

பல்கலைக்கழக நிர்வாக முகாமைத்துவ மாணவன்

### செல்வன் வில்பிறட் ரஞ்சித்

15-3-90 இல் பூம்புகார் கடலில் சுழி விபத்தில் அகால மரணமடைந்த இவரின் நினைவாக...

நினைத்து நினைத்து நெஞ்சம் உருகுதே
நீ இங்கு இல்லாது துன்பம் பெருகுதே!
நெஞ்சிருக்கும் வரை உன் நினைவிருக்கும்.

ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் :
யாழ். இந்து மகளிர் கல்லூரி GELT 1989/90,
ஆசிரியர்கள், நண்பர்கள்.

[20084]

## நினைவு அஞ்சலிக் கூட்டம்



### பேராயர் சபாபதி குலேந்திரன்

நாளை திங்கட்கிழமை [16-03-92] மாலை 3.30 மணிக்கு பரி. யோவான் கல்லூரியில் நடைபெறும்.

மதகுருமார், பேராசிரியர்கள் மற்றும் பிரமுகர்கள் கலந்து கொள்கின்றனர்.

நண்பர்கள், அபிமானிகள், உறவினர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வண. ஜி. டி. ஆனந்தராஜன்
செயலர், தெ.இ.தி. யாழ். மறை மாவட்டம்

[சி/1711]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜீவ் கொலை வழக்கு:

# இலங்கை நீதிமன்றத்திலும் சாட்சியங்கள் பதிய முயற்சி

## இந்தியா அனுமதி கோருகிறது

கொழும்பு, மார்ச் 15

ராஜீவ் காந்தி கொலை தொடர்பான சில சாட்சியங்களை இலங்கையில் வைத்துப் பதிவு செய்வதற்கு இலங்கை அரசின் ஒத்துழைப்பை இந்தியா கோரி உள்ளது.

இந்திய நீதிமன்றம் சார்பாக இலங்கை நீதிமன்றம் ஒன்று சாட்சியங்களைப் பதிவு செய்யலாம் என்று இது தொடர்பான கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

இந்திய விசேட நீதிமன்றம் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் மூலமாக இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளது.

'லெட்டர் ரொக்கேட்டரி' (Letter Rogetory) என்று சட்டத்துறையில் அழைக்கப்படும் இக்கடிதம் குறித்து கொழும்பில் சட்ட மா அதிபர் திணைக்களம் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ-த]

## இரகசியப் பொலீஸ் என்று கூறி கொள்ளை

கொழும்பு, மார்ச் 15

கம்பஹா, சீதுவைப் பகுதியில் தங்களை இரகசியப் பொலீஸார் என்று கூறிக் கொண்டு பட்டப்பகலில் வீடுகளுக்குச் சென்று தங்கச் சங்கிலிகளைக் கொள்ளையடித்து வந்த இரண்டு இளைஞர்களை சீதுவைப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது. [இ-எ]

## கைதானோரை விடுவிக்கக் கோரி

# கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் போர்க்கொடி

வாதுவையில் அண்மையில் கூட்டம் ஒன்று நடத்திக் கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்யும்படி கொழும்பு பல்கலைக்கழக மாணவர் கவுன்ஸில் கோரியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர் தலைவர்கள் கடந்த வியாழக்கிழமை செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தினார்கள்.

கடந்த மாதம் 27ஆம் திகதி வாதுவைப் பொலீஸார் மாணவர்களையும் அவர்களுடன் இருந்த விரிவுரையாளர்களையும், பொறியியலாளர்களையும் கைது செய்தது சட்ட விரோதமானதாகும் என்று பல்கலைக்கழக மாணவர் கவுன்ஸில் தலைவர்கள் அப்போது தெரிவித்தனர்.

வாதுவைக் கூட்டத்தை பிரசைகள் முன்னணியே நடத்தியது. அதில் கலந்து கொள்ள பல்கலைக்கழக மாணவர் கவுன்ஸில் தனது மாணவர் குழு ஒன்றை அனுப்பி வைத்தது. பல்கலைக்கழகத்திற்கு வெளியே உள்ள சட்டபூர்வமான அமைப்புகளுடன் இணைந்து செயற்பட மாணவர் கவுன்ஸிலுக்கு சட்டம் இடமளிக்கிறது என்பதை மாணவர் கவுன்ஸில் சுட்டிக் காட்டி உள்ளது. (இ-எ)

## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் பட்ட மேல் கல்வி டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான அவசர ஆலோசனைக் கூட்டம் யாழ். பிராந்தியத்தில் எதிர் வரும் புதன்கிழமை காலை9 மணிக்கு நடைபெறும். [த]

## பேச்சுப் போட்டி

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கிடையிலான பேச்சுப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாவட்ட ரீதியில் நடைபெறும். [இ-30]

## முல்லைத்தீவிலும்

# அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க கிராம சேவகர் அறிக்கை போதும்

காணாமல் போன அல்லது பழுதடைந்த அடையாள அட்டைகளுக்குப் பதிலாக புதிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக, கிராம சேவையாளரின் அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ள முல்லைத்தீவு அரச அதிபருக்கு ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் நாயகம் அனுமதி வழங்கியுள்ளார்.

காணாமல்போன அல்லது பழுதடைந்த புதிய அடையாள அட்டைகள் பெற விண்ணப்பிக்கும் போது பொலீஸ் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதே நடைமுறையாகும்.

ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொலீஸ் நிலையம் இயங்காமல் இருப்பதனால் அடையாள அட்டை பெற மக்கள் சிரமப்பட வேண்டி இருப்பதை, அரச அதிபர் சுட்டிக் காட்டியதை அடுத்தே ஆணையாளர் இவ் அனுமதியை வழங்கினார். (த-126)

# சாதி அமைப்பு முறை போன்று பெண் அடக்கு முறையும் ஒரு குற்றம்

## மகளிர் தின விழாவில் யோகி

மானிப்பாய், மார்ச் 15

''சாதி அமைப்பு முறை எவ்வாறு எம்மத்தியில் வெறுப்புக்குரியதொன்றாகப்படுகின்றதோ அதே போல பெண் ஒடுக்கு முறையும் ஒரு குற்றமாக உணரப்பட வேண்டும். பெண் அடக்கு முறையை எதிர்த்து ஆண்களே போராட முனையும் இவ் வேளையில் பெண்களில் மிகச் சிலர் அடக்கு முறையை ஏற்றுக் கொள்ளும் நிலை வருத்தத்துக்குரியது.''

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியின் வலிகாமம் பிரிவினரால் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடத்தப்பட்ட அனைத்துலக மகளிர் தின விழாவில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி மேற்கண்டவாறு கூறினார்.

வலிகாமம் பிரிவு மகளிர் அமைப்பு உதவிப் பொறுப்பாளர் செல்வி தாமரையின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. யோகரத்தினம் யோகி மேலும் பேசியதாவது:

பெண் விடுதலை என்பது அரச, சமூக, பொருளாதார நிலைகளில் பெண் இனம் விடுதலை பெறுவதையே குறிக்கும்.

எமது மண்ணின் விடுதலை எவ்வாறு முக்கியமானதோ அதே போல இம் மண்ணில் வாழும் மக்கள் சகல அடக்கு முறைகளில் இருந்தும் விடுதலை பெற வேண்டும்.

பண்பாடு வேறு, நாகரிகம் வேறு.

போராளியைப் பொறுத்தவரை பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி இருப்பதால் சமுதாய பண்பாட்டு நிலை அவனுக்கு பொருத்தமானதாக அமையாது

பாலியல் வன்முறைக்காளாக்கப்படும் ஆணையோ அல்லது பெண்ணையோ பண்பாடு என்ற பதத்தை பாவித்து சமுதாயத்தில் இருந்து ஒதுக்கி வைப்பது குற்றமாகும்.

இப்படி அவர் கூறினார்.

வலிகாமம் பிரிவு மகளிர் அமைப்பின் பொறுப்பாளர் செல்வி எழிலி உரையாற்றுகையில் —

பெண்கள் அரசியல் ரீதியாக எழுச்சி கொள்ள, எமது சமுதாய அமைப்பு முறை தடைகல்லாக இருந்து வருகின்றது.

மனுதர்ம சாஸ்திரங்கள், புராண இதிகாசங்கள், வரலாறுகள் யாவும் மூடநம்பிக்கைகளையும், பெண் அடிமை, ஒடுக்கு முறைகளையும் கொண்டுள்ளன.

பெண்களின் ஒழுக்கம், கற்பு நிலை பற்றி எடுத்துக்கூறும் எந்த ஒரு புராண இதிகாசமாவது ஆண்களின் ஒழுக்கம் பற்றி எடுத்துரைக்கவில்லை. பெண் இனத்தை சிறுமைப் படுத்தும் இக் கொள்கைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றார்.

அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்த்தினர். [இ-90]

# தெரிவுக்குழு சுமுகமான தீர்வொன்றைக் காணும்

## அஷ்ரப் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 15

இனப் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வொன்றைக் காண வேண்டிய முழுப் பொறுப்பும் சுதந்திரக்கட்சி எம். பி. மங்கள முனசிங்கா தலைமையிலான நாடாளுமன்ற தெரிவுக் குழுவிடமே இப்போது உள்ளது.

இந்தக் குழு சுமுகமான தீர்வொன்றைக் காணும் என்றே நான் நம்புகிறேன்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் இக் குழுவில் அங்கம் வகிப்பவருமான எம். எச். எம். அஷ்ரப் இவ்வாறு தெரிவித்துள்ளார். [த]

# துணுக்காயில் நடமாடும் செயலகம்

புதுக்குடியிருப்பு, மார்ச் 15

மாந்தை கிழக்கு, துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான நடமாடும் செயலகம் நாளை திங்கட்கிழமை துணுக்காயில் நடைபெறும்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சகல திணைக்களத்தினரும் இதில் பங்கு பற்றி, மக்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்வுகாண நடவடிக்கை எடுப்பர் என்று முல்லைத்தீவு கச்சேரி நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (த-126)

## சிறுவன் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 15

குப்பிவிளக்கு தட்டுப்பட்டு விழுந்ததனால் உடலெங்கும் எரிகாயங்களுடன் யாழ்.வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவன் கடந்த வெள்ளிக்கிழமை அங்கு மரணமானான்.

சுன்னாகத்தைச் சேர்ந்த இரத்தினம் உதயகுமார் வயது [14] என்ற சிறுவனே மரணமானவராவார். [த-15]

## மூளையில் கட்டி:

# நோயாளி விமானம் மூலம் கொழும்புக்குச் சென்றார்

யாழ்ப்பாணம், மார்ச் 15

மூளை, நரம்பு சம்பந்தப்பட்ட சத்திர சிகிச்சைக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை நிபுணர் இல்லாத காரணத்தால் இந் நோய்க்குள்ளான ஒரு பெண் விமானம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

குழந்தை பெற்று மூன்று மாதங்கள் கூட ஆகாத இந்தப் பெண் கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சியில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவரது மூளையில் கட்டி ஒன்று இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறைக்கும், அங்கிருந்து கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கும், இப் பெண் அனுப்பி வைக்கப்பட்டார்.

பலாலியில் இருந்து விமானம் மூலம் இவர் அநுராதபுரத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்.

கிளிநொச்சி கணேசபுரத்தைச் சேர்ந்த பசுபதிப்பிள்ளை பொன்னம்மா (வயது 36) என்பவரே இந்த நோயாளி ஆவார். இவருக்குப் பாதுகாப்பாக டாக்டர் ஒருவரும் கொழும்பு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

# அணு ஆயுதங்கள் திருடப்படும் ஆபத்து!

சோவியத் யூனியன் மறைவைத் தொடர்ந்து புதிதாக உருவாகியுள்ள நாடுகளில் இருந்து அணு ஆயுதங்கள் திருட்டுப்போகும் அளவிற்கு, அந்த நாடுகளில் உள்ள அணு ஆயுதக் குதங்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பலவீனமடைந்துள்ளன என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய அணு ஆராய்ச்சி நிலையத்தின் உயர் நிலை அதிகாரி கினாடி நிக்கோப் இந்த எச்சரிக்கையை நேற்று விடுத்தார்.

தற்போது கலவரங்கள் இடம்பெற்று வரும் ஜோர்ஜியா, அஸர்பைஜான் மற்றும் ஆர்மேனியா ஆகிய நாடுகளில் உள்ள அணு ஆயுதங்களை அவற்றின் பாதுகாப்புக் கருதி ரஷ்ய நாட்டுக்கு அகற்ற வேண்டும் என்றும் அந்த அதிகாரி கேட்டிருக்கின்றார்.

பிழையானவர்களின் கைகளுக்கு அணு ஆயுதங்கள் சென்றடையும் ஆபத்து அந்த நாடுகளில் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் எச்சரித்தார். [இ-எ]

# சீனாவிலும் முஸ்லிம் பிரிவினை வாதம்

பீகிங், மார்ச் 15

சீனாவின் வடமேற்கு மாகாணமான ஷிங்யாங்கில் முஸ்லிம் பிரிவினைவாதிகளின் தீவிரவாத நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன என்று சீன அரசு அறிவித்துள்ளது.

சதிச் செயல்கள் மற்றும் பயங்கரவாதச் செயல்களில் முஸ்லிம் பிரிவினைவாதிகள் அதிக அளவில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் ஷிங்யாங் மாகாண நிர்வாகி அறிவித்துள்ளார்.

முஸ்லிம் பிரிவினைவாதக் கிளர்ச்சிகளை அடக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்படி மாகாண பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க் குட்டிகள். நான்கு மாதம் பூச்சி நீக்கியது. அவற்றுடன் கலர் மீன்களுடன் மீன் தொட்டியும் விற்பனைக்கு உண்டு. செ. ஆனந்தன், அரசடி, தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

[20004]

### தவறிவிட்டது

நமசிவாயம் இலட்சுமி என்பவரது அடையாள அட்டை இல. 465352868 V கரவெட்டி யார்க்கரு என்னும் இடத்திலிருந்து பருத்தித்துறைக்குச் சென்ற பொழுது கலிகைச் சந்திக்கிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் நமசிவாயம், தல்லையப்புலம், கரவெட்டி கிழக்கு, கரவெட்டி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [20080]

### மணமகன் தேவை

யாழ். இந்துப் பெற்றோர் 34 வயது, அத்த நட்சத்திர, 8 இல் செவ்வாயுள்ள வங்கிச் சட்ட உத்தியோகத்தரான மணப்பெண்ணுக்கு பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். சாதகக் குறிப்புப் பிரதி, ஏனைய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். இல. 836, மே. பா உதயன். [4519]

யாழ்ப்பாண இந்து, 7 இல் செவ்வாயுள்ள (பாவம் 69) B. Sc. ஆசிரியைக்கு தராதரமுள்ள மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். நட்சத்திரம்: அத்தம். சீதனம் பேசித் தீர்க்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20073]

### மணமக்கள் தேவை

குற்றமற்ற 28 வயது, பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு மணப்பெண்ணும், கனடா வயது 30, மணமகனுக்கும், 39 வயது ஆசிரியைக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள 27, 31 வயது B. Sc. பெண்களுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[20074]

### ஜெனரேட்டர் தேவை

எமது நிறுவனத்திற்கு நல்ல நிலையில் உள்ள ஜெனரேட்டர்கள் (½—3 வலுவுள்ள) தேவை. அலுவலக நேரங்களில் நேரில் தொடர்பு கொள்ளவும். கலக்சி புகைப்பட சேவை, 337, 1 ஆவது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [20057]

### அம்பாள் திருமண சேவை

Ph. D. Lecturer, Doctors, B. Com., B. Sc., B. A., I. C. M. A. ஆகிய மணப் பெண்களுக்கு மணமக்கள் தேவை. விண்ணப்பம் ரூபா 50/-. ஞாயிறில் தொடர்பு கொள்ளவும். சின்னச்சாமிக் குருக்கள் சண்முக ஐயர், வீரமாகாளி அம்மன் கோவில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.

[20063]

### ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை.

[சி-1629]

### பரீட்சை (ஆண்டு- 6, 5,)

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை ஆண்டு 6, 21-3-92 சனி மு. ப. 7-00, மு. ப. 11-00 மணி நேரங்களில் நடைபெறும். ஆண்டு 5 பரீட்சை 22 - 3 - 92 ஞாயிறு மு. ப. 7 - 00, மு. ப 11 - 00 மணி நேரங்களில் நடைபெறும். முற்கூட்டியே பதிவு செய்யவும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [19942]

### விடுகதைகள்

கடந்த வாரம் வரையும் எங்கும் கிடையாமல் நீங்கள் தேடிய பொருள். இப்போது எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும் பொருள். இன்னும் சில நாட்களிலேயே விற்பனையாகி முடிந்துவிடும். உங்களுக்கு ஆயிரம் ரூபா பரிசைத் தரப்போவது அது என்ன? 'நொடியும் விடையும்' - மூன்று பாகங்களும். தொகுப்பாசிரியர்: கோப்பாய் சிவம்.

[20018]

## கணக்கியல் பயிற்சிப் பரீட்சை

**A/L 91 (92 விசேட) பகுதி I**

17 — 03 — 1992 செவ். 12 - 3 மணி

★ மாணவர்கள் உடன் பெயரை பதிவு செய்யவும்.

★ பரீட்சை வினாத்தாள் தொடர்பான விளக்க வகுப்புகள் 17 — 03 — 1992 இல் ஆரம்பம்.

ஆசிரியர்:- S. K. பிரபாகரன்

**விக்னா** கல்வி நிறுவனம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[சி-1660]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 02 — 1932



மறைவு: 14 — 02 — 1992

அமரர்

## ஐயாத்துரை கோபாலசுந்தரம்

(கோபால்)

(எக்ஸ்போ பேணிச்சர் [Pvt. (Ltd]. ஸ்தாபன முகாமையாளரும், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும்)

பூவுலகில் காலமெனும் சக்கரத்தில்
மதியொடு தோற்றமளித்தாய்
தாழமெனும் வாழ்வினிலே ஏற்றம்
கொடுத்தாய்
கோல மெனும் சிங்காரத் தோற்றத்தில்
எம்மோடு வாழ்ந்திட்டாய்
ஞால மெனும் கூண்டை விட்டு
பரந்தாமன் பாதம் நாடினையோ!

இதயங்கள் துடிக்குதையோ இல்லறமோ
குமுறுதையோ
உதயமோ புலரவில்லை உள்ளங்களோ
உறங்கவில்லை
பிரிவால் துடிக்கின்றோம் வேதனையால்
உழல்கின்றோம்
வாழ்வெனும் கனவினிலே இரண்டறக்
கலந்திட்டாயோ!

பசுமை நிறைந்த நினைவுகள் வரட்சி
கொடுக்குதையோ
இளமை நிறைந்த கனவுகள் தூக்கம்
கொடுக்குதில்லையையா
தனிமையாய் வாழ்ந்திட தலைவன்
என்று எழுதிட்டாயோ
நாமும் உன் பாதை வழியே
ஓடி வருவோம் ஐயா!

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (15-03-92) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்.**

''சிவகோகுலம்'',
தாளையடி ஒழுங்கை,
திருநெல்வேலி.

[20070]

## தேனீ வளர்ப்பை ஊக்குவிக்க விவசாய திணைக்களம் உதவி

யாழ். மாவட்டத்தில் சுய தொழில் முயற்சியாகத் தேனீ வளர்ப்பு மேற்கொள்ளப்பட உள்ளது.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தேனீ வளர்ப்பை ஊக்குவிக்கும் முகமாக விவசாயத் திணைக்களம் உதவிகளை வழங்கவுள்ளது.

தேனீ வளர்ப்பில் ஈடுபட விரும்பும் பொது ஸ்தாபனங்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாயப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

[இ-30]

## வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க அறிவித்தல்

16-03-1992 திங்கட்கிழமை நடைபெற இருந்த ஓராண்டு நிறைவு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பின் போடப்பட்டுள்ளது என்றும், இவ் விழா நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் சகல உற்பத்தியாளருக்கும், தொழிலாளருக்கும், ஏனைய அனைத்து மக்களுக்கும் அறியத் தருகின்றோம்.

''நன்றி''

செயலாளர்:
இரா. சுந்தரலிங்கம்.

[சி-1663]

## நீமியா
## உரம்

வெங்காயப் பயிருக்குச் சிறந்த அடி உரம்
பயிருக்குப் பாதுகாப்பளிப்பதுடன்
சிறந்த விளைச்சலையும் தருகிறது.

**"நீமியா உரம்"** வேம்பின் ஆதாரம்.

★ கிலோ பக்கெற் ஒன்றின் விலை ரூ. 15/- மட்டுமே
★ மொத்தக் கொள்வனவில் கழிவு உண்டு.
★ அண்ணா கோப்பிக் கடைகளிலும் கிடைக்கிறது.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

[சி-1708]

தவில் மேதை இணுவில் என். ஆர். சின்னராசா
அவர்களின் ஞாபகார்த்த

## மிருதங்க தாளவாத்திய போட்டிகள்

நடத்துபவர்கள்:
இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையினர்.

**விண்ணப்ப முடிவு திகதி: 01 - 05 - 1992**

போட்டியில் பங்குபற்றுவோர்
தனியாகவும் குழுக்களாகவும் பங்குபற்றலாம்.

வயதெல்லை: 01-04-1992 அன்று மேற்பிரிவாயின் 12 வயதிற்கும், 20 வயதிற்கும் இடைப்பட்டோர். கீழ்ப் பிரிவாயின் 12 வயதிற்குக். கீழ்ப்பட்டோர்

மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
செயலாளர், இளந்தொண்டர் சபை சைவப் பணிமனை,
இணுவில் கந்தசுவாமி கோவில்.

[20078]

## ஜெபமே ஜெயம்

**24 மணி நேரம் இயேசுவின் பாதத்தில்,**

17-03-1992 மாலை 5-00 மணி முதல் 18-03-1992 மாலை 5-00 மணி வரை நடைபெறவிருக்கும் உபவாச ஜெபத்தில் பங்கு கொண்டு,

நம் நாடு நலன் பெற ஜெபிப்போம் வாருங்கள்.

'' நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள்''.

மத்தேயு 21 : 22

போதகர்,
கல்வாரி தேவாலயம்,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

[4504]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாழ். விஜயம் வெற்றி தர....

இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை வகுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் பிரதிநிதிகள், விரைவில் யாழ்ப்பாணம் வரக்கூடும் என்பது பிந்திய தகவல்.

விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் நேரில் பேசி, அவர்களின் கருத்தை அறிந்து கொண்டு, தமது தீர்வை வகுக்கவே தெரிவுக் குழுவினர் விரும்புகின்றனர். அதற்குக் குழுவினர் விடுதலைப் புலிகளின் சம்மதத்தை, அனுமதியைக் கேட்டிருந்தனர்.

இனப் பிரச்சினையை இயன்றவரை பேச்சுவார்த்தை மூலம் தீர்ப்பதில் தமக்குள்ள நம்பிக்கையை விடுதலைப் புலிகள் மீண்டும் ஒரு தடவை புலப்படுத்தி உள்ளனர்.

தெரிவுக்குழு அமைக்கப்பட்ட புதிதிலேயே, அதன் தலைவர் திரு. மங்கள முனசிங்கா, தாம் யாழ்ப்பாணம் வந்து விடுதலைப் புலிகள் தலைவர்களுடன் பேச விருப்பம் தெரிவித்திருந்தார். அவரது விருப்பம் இப்போது உத்தியோக பூர்வ வடிவம் பெற்றிருக்கிறது.

தமிழர்களின் பிரதானமான போராட்ட சக்தியாக விளங்குவது விடுதலைப் புலிகள் இயக்கம். அது தமிழர்களின் ஆதரவைப் பெற்ற இயக்கம். எனவே அதனைப் புறந்தள்ளிவிட்டு அல்லது ஓரங்கட்டி விட்டு இனப்பிரச்சினைக்குச் சுமுகமான ஒரு தீர்வை எட்ட முடியாது என்பதே ஆழ்ந்த அரசியல் ஞானம் உள்ள அவதானிகள் பலரதும் கருத்து.

இதனை அரசாங்கத் தரப்பில் உள்ளவர்களும் உணராமல் இல்லை. ஆனால் அதனை வெளியே கூற அவர்கள் தயங்குகின்றனர். விடுதலைப் புலிகளுடன் பேசுவதானாலும் நிபந்தனையுடன் பேசவே விரும்புவதாக அடம் பிடித்து வருகிறார்கள். புலிகளைப் பலவீனமாக்கிய பின்னர் தமது சொந்தத் தீர்வைத் திணிக்க விரும்புகிறார்கள்.

இத்தகைய ஒரு பின்னணியில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்திய பின்னரே, தனது தீர்வுத் திட்டத்தை வடிவமைக்க முன்வந்திருப்பது நம்பிக்கை தரக் கூடிய ஓர் அணுகுமுறை எனலாம்.

அரசியல் தள நிலையைச் சரியாக உணர்ந்து, மதிப்பீடு செய்து நடைமுறைச் சாத்தியமான வழியில் நடக்க முயலும் தெரிவுக் குழுவின் அணுகுமுறை வரவேற்கத் தக்கது.

தமிழர்களின் பிரச்சினைக்குரிய தீர்வு சமநீதியின் அடித்தளத்தில் சமத்துவம், மனித நேயம், புரிந்துணர்வு ஆகியவை கொண்டு நியாயமானதாக வடிவமைக்கப்பட வேண்டும். தமிழர்களும் மனிதர்கள்; அவர்களுக்கும் வாழ்வுரிமை உண்டு; அவை பிறர் வழங்கி வருபவை அல்ல என்ற கோட்பாடு புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

தமிழர்கள் ஒரு தனி இனம். அவர்கள் தங்களைத் தாமே ஆள்வதற்கு உரிமையுடையவர் என்ற உண்மையைப் புரிந்து கொண்டால் பிரச்சினையை இலகுவில் தீர்த்து விடலாம்.

யாழ்ப்பாணம் வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவினர் இவற்றை மனதில் இருத்தி தெளிந்த சிந்தையுடனும், தூரதிருஷ்டியுடனும் செயற்படுவார்களானால், அவர்களின் விஜயம் நிச்சயமாக சரித்திரம் படைக்கும், இந்நாட்டு அரசியலில் ஒரு திருப்பத்தை உருவாக்கும்.

# குரக்கன் உற்பத்தியில் ஈடுபட்டால் ஏக்கருக்கு ரூ. 6,000 வருமானம்

## நெல் அறுவடை முடிந்த பின்னரும் விதைக்கலாம்

**ச. பொன்னுத்துரை**
(விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர்)

வட பகுதியில் செய்கை பண்ணப்படும் உணவுத் தானியங்களுள் குரக்கனும் முக்கியமானதொன்றாகும். மாச்சத்து பெறுமானம் அரிசியுடன் ஒப்பிடக் கூடியது (76%). குரக்கனில் அரிசியை விட அதிக கனியுப்புக்கள் (2.2%), கொழுப்பு (1.3%), கல்சியம், மற்றும் பொஸ்பரஸ் ஆகியன காணப்படுகின்றன. மற்றைய பயிர்களுடன் ஒப்பிடுமிடத்து பீடைகளின் தாக்கம் குறைவு. அத்துடன் பயிர் வளர்ச்சிக்கு தேவைப்படும் நீரின் அளவும் குறைவாக உள்ளது

நெல் வயல்களில் அறுவடைக் காலத்தில் தரையிலுள்ள மீதி ஈரத்துடன் தரையை ஓரளவு பண்படுத்தி நேரடி விதைப்பும் மேற்கொள்ளப்படுகிறது இம்முறையில் தரையிலுள்ள ஈரத்தின் அளவைப் பொறுத்து விளைவு வேறுபடுகிறது. இந்த முறையில் இப்போது விவசாயிகள் நாட்டம் குறைந்து விட்டதாயினும் அதில் அக்கறை செலுத்த வேண்டும். இதை குறைந்த செலவுடன்பயிர் செய்யலாம்.

தரையை நன்றாகப் பண்படுத்திக் களைகளை அகற்றுதல் அவசியம். விதையின் பருமன் மிகவும் சிறிதாக இருப்பதனால் மண் தூர்வையாக இருக்க வேண்டும். பெரும்பாலும் இப் பிரதேசத்தில் நாற்று நடுகை முறையைப் பின்பற்றுகிறார்கள் தோட்டக் காணிகளில் பணப் பயிர்களான வெண்காயம், புகையிலை, மிளகாய். மரக்கறிகள் என்பவற்றுடன் சுழற்சி முறையில் பயிர் செய்யும் பொழுது ஆனி, ஆடி மாதங்களில் நாற்றுகளைப் பாத்திகளில் உற்பத்தி செய்து நாட்டுகிறார்கள்

**வர்க்கம்**

திருந்திய வர்க்கங்களான கோ. 10, கே. எம்- 1- பி (B) எஸ் 20 மற்றும் உள்ளூர் இனங்களும் பாவனையிலுள்ளன. கோ-10, கே. எம்-1 இனங்கள் 90-100 நாட்களும், பி (B) எஸ். 20 எண்பது (80) நாள் வயதினையும் உடையது

**விதையின் அளவு**

ஏக்கரொன்றுக்கு நாற்றுக்களை உண்டு பண்ண ஒரு கிலோ விதையும், நேரடி விதைப்பு செய்வதாயின் இரண்டு கிலோவும் போதுமானது. விதைகளைக் கப்ரான் அல்லது திராம் (5 கிராம் மருந்து, ஒரு கிலோ கிராம் விதை என்ற அளவில்) பூஞ்சண நாசனியுடன் கலந்து தொற்று நீக்கி விதைப்பது வீரியமான பயிர்களைப் பெற உதவுகிறது.

வரிசையில் நேரடி விதைப்பு மேற்கொள்ளும் பொழுது வரிசைகளுக்கிடையில் 30 ச.மீ இடைவெளியிருப்பது விரும்பத்தக்கது. பயிர் முளைத்து 2—3 வாரங்களில் வரிசையில் பயிர்களுக்கிடையில் 15 ச. மீ. இடைவெளியும் இருக்கக் கூடியதாக மேலதிக பயிர்களை அகற்றியும் வெற்றிடங்களில் நாற்றுக்களை நட்டும் தேவையான பயிர் எண்ணிக்கையை ஏற்படுத்துதல் வேண்டும்.

**உரமிடுதல்**

நாற்றுகளை உண்டு பண்ணும் பொழுது 100 சதுர மீ. பரப்பிற்கு 200 கிராம் அமோனியம் சல்பேற், 200 கிராம் அடர் சுபர் பொஸ்பேற், 150 கிராம் பொற்றாஸ் பாவித்தல் வேண்டும்.

இரசாயன உரம் அன்றி இயற்கைப் பசளைகளை, சேதனப் பசளைகளைப் பாவிக்கும் பொழுது மண்வளத்தைக் கவனத்திற் கொண்டு வளமாக்கிகளை உபயோகிக்கவேண்டும். பயிர்ப் போஷணைகள் கூடினால் புதிய வளர்ச்சி அதிகரித்து பயிர்கள் பாட்டத்தில் விழுவதுடன், பீடைகளின் பெருக்கமும் ஏற்பட்டு விளைவும் பாதிக்கப்படும்

தேவைக்கேற்ப 4—6 நாட்களுக்கொருமுறை நீர்ப் பாசனம் மேற்கொள்ள வேண்டும்.

**நோய்கள்**

சந்து குத்தி, அறக்கொட்டியான், வெட்டுக்கிளி, அழுக்கணவன், உறிஞ்சும் பூச்சி என்பனவற்றின் தாக்கத்தை மதிப்பிட்டு தேவைப்படும் பொழுது சிபார்சு செய்யப்பட்ட பீடை நாசனி, பூஞ்சண நாசனி கொண்டு கட்டுப்படுத்தல் வேண்டும்.

எரிவந்தம் (பூஞ்சணநோய்) சிறுபோகத்தில் அதிகம் பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. தகுந்த பராமரிப்பு, உரப்பாவனையினால் இந்நோய் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

**அறுவடை**

கதிர்கள் முதிர்ச்சியடைவதை அவதானித்து அவ்வப் பொழுது அறுவடை [4–5 நாட்களுக்கொருமுறையாக 2 அல்லது 3 தவணைகளில்] செய்தல் வேண்டும்.

பின்னர் கதிர்களை ஓரிடத்தில் [நிழலில்] குவித்து 3 நாட்களுக்குப் பின் உலர்த்தி தடியினால் அடித்து தானியத்தைப் பிரித்து தூசுகளை வேறாக்கி சுத்தம் செய்தல் வேண்டும். நன்றாக உலர்த்திய [ஈரப்பதம் 12 - 13 %] தானியம் களஞ்சியப்படுத்தும் பொழுது பீடைகள், பூஞ்சணம் என்பனவற்றால் பாதிப்படைவதில்லை.

**விளைவு**

வயல்களில் நெல் அறுவடையின் பின் மீதி ஈரலிப்புடன் செய்கை மேற்கொள்ளும் பொழுது ஏக்கருக்கு 200—300 கிலோவும், பாசனமுறையில் 600—800 கிலோவும் விளைவாகப் பெறலாம். தானியத்தின் விலை கிலோ 25/- எனக் கொள்ளப்படும் பொழுது சுத்த வருமானம் [Net Income] ரூபா 2,350/- தொடக்கம் ரூபா 6,000/- வரை வேறுபடுகிறது. ★

### குரக்கன் உற்பத்தி: செலவும், வருமானமும்

| செலவு | பாசன முறை (ரூபாவில்) | மீதி ஈரலிப்புடன் செய்யும் முறை (ரூபாவில்) |
|---|---|---|
| தரைபண்படுத்தல் | 1,600 | 1,400 |
| புருவமமைத்தல் | 400 | — |
| விதை, தொற்று நீக்கம் விதைப்பு | 200 | 250 |
| நாற்றுகள் உற்பத்தி | 400 | — |
| பயிர்ப்பாதுகாப்பு | 800 | — |
| பாசனம் | 2,000 | — |
| உரம் | 1,100 | — |
| நாற்று நடுகை | 1,600 | — |
| களை அகற்றல் | 750 | — |
| அறுவடை | 600 | 500 |
| தானிய மாக்கல் | 800 | 500 |
| மொத்த செலவு | 10,250 | 2,650 |
| விளைவு (கிலோ) | 650 | 200 |
| கிலோ ரூ 25/- வீதம் வருமானம் | 16,250 | 5,000 |
| செலவு | 10.250 | 2,650 |
| சுத்த வருமானம் | 6,000 | 2,350 |

## விவசாயம்

வரட்சி - தேயிலை விலை உலகச் சந்தையில் வீழ்ச்சி:

# இலங்கைப் பொருளாதாரம் பெரும் நெருக்கடி நிலையில்

### பி. பி. ஸி. கண்ணோட்டம்

வரட்சி காரணமாகவும் முக்கிய ஏற்றுமதிப் பொருளான தேயிலையின் விலை உலகச் சந்தையில் வீழ்ச்சியடைந்துள்ளதாலும் இலங்கையின் பொருளாதாரம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது

பி பி. ஸி. செய்தியாளர் கிறிஸ்மொறிஸ் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய விமர்சனத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

விமர்சனத்தில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

இலங்கையில் கடந்த மழைக்காலத்தில் மழைவீழ்ச்சியின் அளவு சராசரியை விடக் குறைவாக இருந்தது. அத்துடன் கடந்த 2 மாதங்களாக இடைக்கால மழையும் பெய்யவில்லை. கடும் வரட்சி ஏற்பட இவையே காரணம்.

இலங்கையில் [illegible] தேசிய உற்பத்தி அளவில் கணிசமான பங்கு விவசாயத்தின் மூலமே கிடைக்கிறது. எனவே வரட்சியால் விவசாயம் பாதிக்கப்படுவது தேசிய பொருளாதாரத்திலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

குறிப்பாக தேயிலை உற்பத்தியில் இந்த ஆண்டின் முதலாவது கால்கூறில் [Quarter] ஒரு கோடி கிலோ கிராம் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக சந்தையில் ஏற்பட்ட விலை வீழ்ச்சி காரணமாகவும் —

தேயிலையைக் கூடுதலாக வாங்கும் நாடுகளான ஈராக், சோவியத் யூனியன் ஆகியவற்றை முற்றாகவோ பகுதியாகவோ இழந்துள்ளதாலும் இலங்கையின் தேயிலை வர்த்தகம் ஏற்கனவே பெரிதும் [illegible] போது வரட்சியால் மேலும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகி வருகிறது

தேயிலை வருமானம் குறைவதால் இந்த வருடத்தில் சுமார் இரண்டு கோடி அமெரிக்க டொலர் வருமானம் குறையும் என அரசு கடந்த மாதம் மதிப்பீடு செய்தது

வரட்சி நீடிக்குமானால் இந்தத் தொகை அதிகரிக்கலாம்.

மின் உற்பத்தியும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது.

வரட்சி நிவாரணம் கொடுப்பதும் செலவை அதிகரிக்கும்.

மேலும் அகதிகள் புனர்வாழ்வு பராமரிப்பு, வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைச் செலவு அதிகரிப்பு ஆகியவற்றினாலும் இலங்கையின் வரவு - செலவுத் திட்டம் மேலும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படும்.

இப்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-10]

## நாயும் பூனையும்!

நாயும் பூனையும் போலச் சண்டை பிடிக்காதீர்கள் என்று சொல்வது வழக்கம். ஆனால் நாயும் பூனையும் சேர்ந்து விளையாடுவதையும், நாயின் மடியில் பூனை பால் குடிப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

தாவடியில் நாய் ஒன்றின் மீது இரண்டு நாள் வயதான பூனைக்குட்டி ஒன்று ஊர்ந்து விளையாடியதை நேற்றுக் காண முடிந்தது.

தாவடியில் வியாபாரியான திரு ஆர். சுந்தரலிங்கத்தின் வீட்டிலேயே இக்காட்சியைக் காண முடிந்தது.

கடந்த வியாழக்கிழமை இரவு அந்தப் பூனைக்குட்டியை தமது வளர்ப்பு நாய் ஈன்றெடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஐந்து வயதான கலப்பு இனத்தைச் சேர்ந்த தமது நாய் ஏற்கனவே மூன்று தடவைகள் நாய்க்குட்டிகளை ஈன்றதாகவும் —

இம்முறை இந்தப் பூனைக் குட்டியை ஈன்றதாகவும் — அவர் கூறினார்.

நாயும் பூனைக்குட்டியும் சுகமாக இருக்கின்றன.

[அ-68]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸப் பூதம் மீளத் தலைதூக்கலாம்

## கோர்பச்சேவ் கூறுகிறார்

கிரேக்க இதிகாசத்தில் வரும் பூதம் ஒன்றைப் போல கம்யூனிஸம் மீண்டும் அதன் தலையைக் காட்டக்கூடும் என்று முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் கூறியுள்ளார்.

''கம்யூனிஸம் மீண்டும் உயிர் பெறலாம். கிரேக்க இதிகாசத்திலே ஹைட்ரா என்று ஒரு பூதம் பற்றி வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பூதத்தின் தலையைத் துண்டித்துவிட்ட பின்னரும் அதன் தலை மீண்டும் வளரும். அதே போன்றதே கம்யூனிஸம்'' என சுவிஸ் பத்திரிகை ஒன்றுக்கு மாஸ்கோவில் வைத்து அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். [ஒ]

# கிழக்கில் 10 தமிழர் கைது!

கடந்த நான்கு நாட்களில் மட்டக்களப்பு பகுதியில் பத்து தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த செவ்வாயன்று பாலையடிவெட்டை, வெல்லாவெளி ஆகிய இடங்களில் இருந்து வந்த இராணுவத்தினர் கலவாய் என்ற இடத்தைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

அச்சமயம் இரு பெண்கள் உட்பட ஐவரை அவர்கள் பிடித்து முகாமுக்குக்கொண்டு சென்றனர்.

கடந்த வியாழன்று இடம் பெற்ற மற்றொரு சம்பவத்தில் சித்தாண்டி மண்டூர்ப்பகுதிகளை சுற்றிவளைத்த படையினர் ஐந்து தமிழ் இளைஞர்களை தம்முடன் பிடித்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [உ-5]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா சரஸ்வதி

புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கச்சேரியடியில் வசித்தவருமான திருமதி நடராசா சரஸ்வதி 13-03-1992 இல் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. நடராசாவின் அன்பு மனைவியும், பரமானந்தம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவானந்தம், யோகேஸ்வரி, மகேஸ்வரி, முனீஸ்ஆனந்தன், யோகானந்தன் [சாந்தன் - சாரதி] ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னலட்சுமி, நடராசா, யோகராசா (ஜேர்மன்), சுப்பிரமணியம் [ஆட்டோ சாரதி], உதயகுமார் [ஆட்டோசாரதி], குணாவதி, தர்மவதனி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [15-03-1992] ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் இலக்கம் 156, கண்டி வீதி [மாம்பழஞ்சந்தி] யிலிருந்து தகனக் கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

யோகானந்தன் (சாந்தன்)
[மகன்]

156, கண்டி வீதி,
மாம்பழஞ்சந்தி,

[20079]

## இளையதம்பி சுப்பிரமணியம்

புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம் இல. 424, கில்னர் லேனில் வசித்தவருமாகிய இளையதம்பி சுப்பிரமணியம் 14-03-1992 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் புங்குடுதீவு கிராமசபை முன்னாள் உறுப்பினரும், இறுப்பிட்டி அரியநாயகம்புலம் ஸ்ரீ வீரசித்தி விநாயகர் தேவஸ்தான தர்மகர்த்தாவும், புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் 16ஆம் கிளைக்குழுத் தலைவரும், காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இளையதம்பி நாகமுத்து தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி முருகேசு நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், அன்னம்மாவின் அன்புக்கணவரும், சிவபாலன் (கொலண்ட்), தவபாலன் [சுவிஸ்], சுதாமதி, ஜெயமதி, கோபாலகிருஷ்ணன், இந்துமதி, பார்த்தீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொன்னையா, காலஞ்சென்ற கந்தையா, காலஞ்சென்ற திருமதி கணபதிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை, திருமதி சுப்பிரமணியம், அன்னப்பிள்ளை, கார்த்திகேசு (கனடா), காலஞ்சென்ற செல்லத்துரை [பிரபல வர்த்தகர் யாழ். பண்ணை], நடராசா [ஓய்வு பெற்ற அதிபர் புங். ஸ்ரீ சண்முகநாதன் வித்தியாலயம்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஏரம்பமூர்த்தி காலஞ்சென்ற இராசேஸ்வரி, திருமதி மகேஸ்வரி மகாதேவன், திருமதி செல்வலெட்சுமி கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், திருமதி திருச்செல்வி மனோகரனின் [யாழ். வர்த்தகர்] அன்பு சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (15-3-92) ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்;

நடராசா (சகோதரன்)

இல. 424, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம்.

[4531]

## கதிர்காம..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருவது அத்த ஆறு விடயங்களில் ஒன்றாகும். ஏனைய ஐந்தும் வருமாறு:-

★ ஜனசவிய பற்றிய உண்மை நிலையை வெளிப்படுத்துவது.
★ மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கைகளை எதிர்த்தல்.
★ ஊழியர் சேமலாப நிதி முறையை ஒழிப்பதை எதிர்த்தல்.
★ கடத்தல், காணாமற் போதல் போன்றவை பற்றிய தகவல்களைப் பகிரங்கப்படுத்துதல்.
★ என்றுமில்லாதவாறு விலைவாசி உயர்ந்திருப்பதை எடுத்துக் காட்டுதல்.

இந்தப் பாதயாத்திரையில் லலித் குழுவினரின் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி இறுதி நேரத்தில் பங்குபற்றக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுமார் 179 மைல் நடைபெறவிருக்கும் பாதயாத்திரை ஏப்ரல் 2 ஆம் திகதி கதிர்காமத்தை அடையும்.

பாதயாத்திரைக் குழுவினர் தினசரி ஆறு முதல் 16 மைல் தூரம் நடப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [உ]

## வடக்கில்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்திருந்தது.

விடுபட்ட பரீட்சைக்குப் பதிலாக விசேட பரீட்சை ஒன்று ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் எனக் கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் உறுதியளித்திருந்தன.

விசேட பரீட்சை ஏப்ரல் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என உத்தியோகப் பற்றற்ற முறையில் தகவல்கள் வெளிவந்திருந்தன. எனினும் கூட்டுப்படையின் அனுமதி கிடைக்கும் வரை அது குறித்து நிச்சயமற்ற நிலை நிலவியது.

இதனை ஆட்சேபித்து கடந்த வாரம் மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் மாபெரும் பேரணி ஒன்றை நடத்தியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

கூட்டுப் படை இப்போது அனுமதி வழங்கிவிட்டதால் பரீட்சை முன்னர் திட்டமிடப்பட்டது போல, எதிர்வரும் இரண்டாம் திகதி ஆரம்பமாகும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. [அ-உ-5]

## புலிகளுடன்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் விரும்புகின்றன —என்றும் அவர் சொன்னார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டிருக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் முன், தீர்வுக்கான முன் யோசனைத் திட்டம் எதனையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வைக்கவில்லை என்று உண்மையே.

ஆனால் எமது கட்சி தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கு கொண்டு வருகின்றது.

### இறுதிச் சந்தர்ப்பம்

ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு ஒன்றை தெரிவுக் குழு தயாரிக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த முயற்சி வெற்றியளிக்காவிட்டால் இனி அரசியல் தீர்வுக்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். இது தான் இறுதிச் சந்தர்ப்பம் —என்றும் அவர் சொன்னார்.

ஏன் அப்படிக் கூறுகிறீர்கள்? என்று கேட்டதற்கு —

பிரச்சினைக்குத் தீர்வுகாண எல்லாப் பெரிய கட்சிகளும் ஒன்றாக கைகோர்த்து செயற்படும் சந்தர்ப்பம் இதுதான் — என்றார் அவர்.

''தெரிவுக்குழு முயற்சியின் முடிவில் பிரயோசனமான தீர்வு ஏதும் கிடைக்காவிடில்......? — என்று கேட்ட போது —

''அழிவைத் தவிர வேறெதுவும் கிடைக்காது'' —என்று அவர் பதிலளித்தார். [உ]

## கிராம சேவையாளர் தெரிவு

# போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்ப திகதி நீடிப்பு

கிராம சேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித்தினம் இம்மாதம் 24 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை பரீட்சை ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அனுப்பியுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பிப்பவர்களின் வசதி கருதி, விண்ணப்ப முடிவு திகதியை நீடிக்குமாறு யாழ். அரச அதிபர், பரீட்சை ஆணையாளரைக் கேட்டிருந்தார். [உ-5]

# ஆஸி அணிக்கு வெற்றி!

கோபார்ட், மார்ச் 15

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று ஆஸ்திரேலிய அணி ஸிம்பாப்வே அணியை 128 ஓட்டங்களினால் தோற்கடித்தது.

வெற்றி பெறுவதற்கு—ஆஸ்திரேலியாவின் 266 ஓட்டங்களை—எட்டவேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடத் தொடங்கிய ஸிம்பாப்பே அணி 41. 4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

ஸிம்பாப்வே அணி இதுவரை பங்குபற்றிய 7 ஆட்டங்களிலும் தோல்வியடைந்தது என்பது தெரிந்ததே அந்த அணிக்கு இன்னும் ஓர் ஆட்டம் எஞ்சியிருக்கிறது. (உ)

## நாடகம்

குருநகர், மார்ச் 15

யாழ். திருமறைக் கலா மன்ற நாடகப் பயிலக மாணவர்கள் தயாரித்து வழங்கும் ''நெஞ்சக் கனகல்'' நாடகம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6-45 மணிக்கு யாழ். பிரதான வீதி கலையரங்கில் மேடையேறும். [இ-51]

## விபத்தில் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 15

நல்லூர் ஆலய தேர்முட்டிக்கு அருகே நேற்றுமுற்பகல் இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் மரணமானார்.

திருநெல்வேலி தெற்கைச் சேர்ந்த கே. செல்லத்துரை [வயது 70] என்பவரே உயிரிழந்தவராவார்.

கோயிலுக்கு முன்னால் வீதியால் வந்து திரும்பிய ''பிக் - அப்'' வாகனம் ஒன்று மணலில் வழுக்கி இழுத்துச் செல்லப்பட்டதால் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [உ-15]

## தொழில்..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஆண்டு].

ஏப்ரல் 6

தேசிய டிப்ளோமா ஆங்கிலம், தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா [விவசாயம்].

ஏப்ரல் 22

ஆபரண வடிவமைப்பு, உற்பத்தி ஆகியவற்றில் தேசிய டிப்ளோமா, வியாபாரப் பாடநெறி. [உ-5]

# மரண அறிவித்தல்கள்

## இ. கனகசபாபதிக் குருக்கள்

முரசுமோட்டையைச் சேர்ந்த பிரமஸ்ரீ கனகசபாபதிக் குருக்கள் [முரசுமோட்டை முருகன் ஆலயம்] 13 - 3 - 92 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் அழகம்மாவின் அன்புக் கணவரும், திருமதி நாகபூஷணி, கமலாதேவி, காந்தி, இரகுநாதக் குருக்கள், கிருஷ்ணநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சண்முகநாதசர்மா

மனோன்மணி அம்மன் கோவில்,
நல்லூர்.

[20082]

## வேலுப்பிள்ளை அப்புக்குட்டி

சுதுமலை வடக்கு பிரபல சுருட்டு வர்த்தகர் வேலுப்பிள்ளை அப்புக்குட்டி நேற்று [14-3-92] காலமாகி விட்டார். இவர் பாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற றோகினிதேவி, சிவலிங்கம், பாலயோகினி, நீதிராசா [ஜேர்மனி], தெய்வேந்திரம் [சட்டத்தரணி], நாகேஸ்வரி, கமலாவதி, தேவராசா [கனடா] ஆகியோரின் அன்புத் தந்தையும், சபாரத்தினம், பரமேஸ்வரி, குணரத்தினம் [திருமலை], சிவபாதசுந்தரம் [கிராம சேவையாளர், உயரப்புலம்], ராம்கோபால், மகாலட்சுமி, புஸ்பவதி, புஸ்பராணி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், திருச்செல்வம் [டென்மார்க்], திலகராசா [டென்மார்க்], திருநாவுக்கரசு [ஜேர்மனி], திலகவதி, மயில்வாகனம், சசிலதா, கோணேஸ்வரன் [சவூதி], ரஜனி, றமணி, றாஜினி, சுரேஸ், குமரன், சிவாஜினி, ஹம்சாஜினி, கோபிகிருஷ்ணா, ஸ்ரீராதாகிருஷ்ணன், கோபிநாத், கோகுலநாத், மாதவநாத், ராகுலநாத், குமரநாத், நதியா, நரேஸ், ரவிக்குமார், கோமதி, ஜெனன், கஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று ஞாயிறு முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

அ. சிவலிங்கம் [மகன்]

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[20085]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 15-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org